முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1362

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

22.06.2023, வியாழக்கிழமை

1. அறம் காத்துவரும் ஞானியே
அன்னதான மகா சக்தியே
வரம்தந்து உலகோரை மீட்பதே
வையகத்தில் லட்சியமாக கொண்டு அவதாரம் புரிந்த
2. புரிந்தநல் ஆறுமுக அரங்கனே
புண்ணியனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆனி மாதம் 07 ம் நாள், 22.06.2023, வியாழக்கிழமை)
தேசிகன்உன் தர்மபலம்தான் தேசமெல்லாம் பாதுகாப்பை கூட்டி உலகோர்க்கு
3. உலகோர்க்கு ஞானம் அருளக்கூடும்
உண்மைப் பொருளையும் உணர்த்தக்கூடும்
தயவாக வாழ்ந்து இந்த கலியில்
தன்னார்வ தொண்டர்களாக மாற்றி
4. மாற்றியே உலகமெங்கம் நியாயம்தர்மம்
உண்மைபட சேவையாற்றும் மனபக்குவம்
ஆற்றல்கூட்டி அனைத்துமாக இறங்கி
அற்புதத்தை கலியினில் உன் தர்மமே வழிநடத்தும்
5. ஆகவே அரங்கன் தர்மத்தை
ஆறுமுகன் யான் ஆற்றல்பட இயக்கிவர
வரமென அரங்கன் அன்னதானத்தில்
வையகத்தார் பொருளுதவி செய்துகொண்டு
6. அறம் என்கின்ற அரங்கன் சன்மார்க்கத்தை
ஆதரித்து உலகோர் தொடர்ந்து வந்தால் போதும்
வருகவருக கலியுகத்தில் வரம் கூடி வருகின்ற அன்பர்கள் மூலம்
முருகப்பெருமான் என் சக்தி வெளிப்பாடாகி முழுமையான
ஞானலோகமாற்றம் நடந்தேறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–